# பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கருத்துக்கள் தொடர்பான ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அளித்த பதில்கள்

ஜனவரி 25, 2024

**பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கருத்துகள் தொடர்பான ஊடகங்களின் கேள்விகளுக்கு, அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர், திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:**

"பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளரின் சில கருத்துக்கள் தொடர்பான ஊடக அறிக்கைகளை நாங்கள் பார்த்தோம்.

இது இந்தியாவுக்கு எதிரான, தவறான மற்றும் தீங்கிழைக்க கூடிய பிரச்சாரத்தை மேற்கொள்ளும் பாகிஸ்தானின் சமீபத்திய முயற்சியாகும்.

பாகிஸ்தான் நீண்டகாலமாக பயங்கரவாதம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் சட்டவிரோதமான நாடுகடந்த நடவடிக்கைகள் ஆகியவற்றின் மையமாக இருந்து வருவது உலகிற்குத் தெரியும். அவை தனது சொந்த பயங்கரவாத மற்றும் வன்முறை கலாச்சாரத்தால் அழிக்கப்படும் என்று இந்தியா மற்றும் பல நாடுகள் அவற்றை பகிரங்கமாக எச்சரித்துள்ளன.

பாகிஸ்தான் எதை விதைக்கிறதோ அதையே அறுவடை செய்யும்.

அவை தனது தவறுகளுக்காக மற்றவர்களைக் குற்றம் சாட்டுவது ஒரு நியாயப்படுத்தலாகவோ அல்லது தீர்வாகவோ இருக்க முடியாது.”

**புது தில்லி**
**ஜனவரி 25, 2024**